## தமிழகத்திற்கு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# சேலம் மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கண்டனப் பொதுக்கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



தமிழர்களின் இயக்கம், தமிழினத்தின் மேன்மைக்கான இயக்கம், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கான இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களும் இளம் தலைவர் அவர்களும் நம் மொழி - இனம் காக்க பல்வேறு போராட்டங்களை வென்றெடுத்தவர்கள்.

சமூக நீதி மற்றும் மாநில சுயாட்சி குரல் இன்று இந்திய துணை கண்டம் முழுவதும் கேட்கின்றது. ஏன் எதையும் தமிழ்நாடு மட்டும் எதிர்க்கின்றது என்று கேட்பவர்கள் மத்தியில், இதோ அந்த பட்டியலில் இந்தியாவின் பல மாநிலங்கள் சேர்கின்றது என்று சாதித்து காட்டியவர் நம் கழகத் தலைவர் அவர்கள்.

தமிழ்நாட்டை வளர்ந்த பொருளாதார மாநிலமாக உயர்த்தி காட்டியவர் நம் தலைவர் அவர்கள். அதை பொறுக்க முடியாத ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதியை கூட தர மறுக்கின்றது.

எப்போதெல்லாம் இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்துடன் எல்லைப் புறமாகவோ கொல்லைப் புறமாகவோ நுழைய முயல்கிறதோ அப்போதெல்லாம் நம் இயக்கம் விழிப்புடன் இருந்து தமிழ்நாட்டை பாதுகாத்து வருகின்றது.

தந்தை பெரியார் மூட்டிய தீயை பேரறிஞர் அண்ணா திக்கெட்டும் பரவச் செய்தார். தண்டவாளத்தின் தலை வைத்து தமிழை காத்தவர் நம் உயிர் நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தி திணிப்பை என்றும் எதிர்க்கவும், நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து இளம் தலைவர் வழிகாட்டுதலின்படி இளைஞர் அணியின் சார்பாக சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்கண்ட தேதிகளில் கண்டனப்பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகர பகுதி வட்டக் கழக, ஒன்றிய கிளைக் கழக, பேரூர் வார்டு கழக, பொறுப்பாளர்கள் இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: அனைத்து கண்டன பொதுக்கூட்டங்களிலும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் உறுதிமொழியை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும் என மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 08.03.2025 | சேலம் வடக்கு | அஸ்தம்பட்டி பகுதி<br>கோரிமேடு | ஐ.பரந்தாமன்<br>செ.யோக ஸ்ரீ |
| 09.03.2025 | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி பகுதி | வழக்கறிஞர் அ.சரவணன்<br>சூரிய பிரகாஷ் |
| 10.03.2025 | சேலம் மேற்கு | ஓமலூர் கிழக்கு ஒன்றியம்<br>கோட்டகவுண்டம்பட்டி | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ்<br>சேலம் சரண்யா |
| 11.03.2025 | ஓமலூர் | காடையாம்பட்டி கிழக்கு<br>ஒன்றியம்<br>கே.மோரூர் | சௌமியன் வைத்தியநாதன்<br>ச.அஜித்குமார் |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

# ‘அப்பா’வுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்!

**வா**ழும் மக்கள் வாழ்த்தும் தலைவரே,
நேற்றுவரை
பெரியாராக,
அண்ணாவாக,
கலைஞரின் தம்பியாக
இருந்தவரே,
தமிழ் போற்றும் தலைவரே,
வழிவழியாய் சமத்துவபுரம் தரும்
தலைவரே,
தமிழக முதல்வரே,
இன்று
அப்பாவாக,
அதனால்
அப்பாவிற்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்,

எத்தனை
எத்தனை
திட்டங்கள்
தமிழகத்தில்
அப்பாவாய்
பிள்ளைகளுக்கு
தந்துள்ளாய்,
மக்கள்
போற்றும் திட்டங்கள்
இன்று
நாடுகள் போற்றும் திட்டங்களாய் ஆனது,
அதனால்
தலைவர்கள் போற்றும்
தலைவராக,
மாநிலங்கள்
போற்றும் முதல்வராக,
மக்கள் போற்றும்
அப்பாவாக
இருக்கின்றாய்,

முதல்வரின் முகவரியில்
குறைகளை கேட்டறிந்து,
நீங்கள் நலமா என்று
அப்பாவாக
விசாரிக்கவும் செய்தாய்,

உங்களைத் தேடி உங்கள்
ஊரில், மக்களுடன்
முதல்வர் என மக்களின்
அப்பாவாக இருக்கின்றாய்,

அனைத்து பிரச்சனைகளையும் முன் தீர்க்க
உங்கள் தொகுதியில்
முதல்வர்
என
எங்கள் முதல்வரானாய்,
கலைஞர் மகளிர் உரிமை திட்டம்,
விடியல் பயணம்
தந்து
மகளிரின் விடியலுக்கு
அப்பாவானாய்,



கலைஞர் நகர்ப்புற சாலை
மேம்பாட்டு திட்டம்,
முதலமைச்சரின் நகர்ப்புற
சாலை மேம்பாட்டு திட்டம்,
முதலமைச்சரின் கிராம சாலை
மேம்பாட்டு திட்டம்,
கலைஞரின் ஒருங்கிணைந்த
வேளாண் வளர்ச்சி திட்டம்,
முதலமைச்சரின் மண்ணுயிர்காத்து
மன்னுயிர் காப்போம்
என்று,
நகர, கிராமங்களுக்கு
அப்பாவானாய்,

போதாது என்று
கலைஞரின் கனவு இல்லம்,
புதுமைப்பெண்
திட்டங்கள் தந்து
பெண்களை பாதுகாக்கும்
அப்பாவானாய்,

எங்கள்
குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் தந்து,
ஊட்டச்சத்தினை உறுதி செய்தாய்,
நான் முதல்வன்,
தமிழ் புதல்வன் என்று
ஊக்குவிப்பு செய்து,
இல்லம் தேடி
கல்வி தந்து
எண்ணும் எழுத்துமாகி,
தாயுமானவர் திட்டம் தந்து,
அப்பாவானாய்,

மக்கள் உடல்நலன் காக்க
மக்களை தேடி மருத்துவம்,
இன்னுயிர் காப்போம்
நம்மை காக்கும் 48,
இதயம் காப்போம் என்று
இதயம் காக்கும்
அப்பாவானாய்,

பேராசிரியர் அன்பழகன்
அரசு பள்ளி வளர்ச்சித்
திட்டம் தந்தாய்,
வேர்களைத் தேடி திட்டம் தந்து
வளர்ச்சிகளுக்கு
அப்பாவானாய்,

கலைஞரின் கைவினைத் திட்டம் தந்து,
சத்தியவாணி முத்து அம்மையார்
நினைவு தையல்
இயந்திரம் வழங்கினாய்,
தொழில் புரியும்
தோழி,
பணிபுரியும் மகளிருக்கு விடுதி,
வாழ்ந்து காட்டுவோம்
என்று வழிகாட்டும்
அப்பாவானாய்,

கலைஞர் விளையாட்டு
உபகரணங்கள்,
பணமுடிப்பும் தந்து
உலகத்தரம் விளையாட்டு வீரர்களின்
அப்பாவானாய்,

அண்ணல் அம்பேத்கர்
தொழில் முனைவோர்
திட்டம் தந்தாய்,
அயோத்திதாசர் பண்டிதர்
குடியிருப்பு மேம்பாட்டுத்
திட்டம் தந்து ஏழைகளின் அப்பாவானாய்,

வடசென்னை வளர்ச்சித்
திட்டம் தந்தாய்,
மினிடைட்டல் தகவல்
தொழில்நுட்ப பூங்காக்கள் தந்து
டிஜிட்டல்
அப்பாவாய்,

தகைசால் விருது தந்தாய்,
கலைஞர் எழுதுகோல்
விருது தந்தாய்,
கலைஞர் நினைவு கலைத்துறை
வித்தகர் விருது தந்தாய்,
சீரடி அருங்காட்சியகம் தந்து
நீர்வள திட்டமும் தந்தாய்,
அத்தனையும் தந்து
அத்தனைக்கும் அப்பாவானாய்,

இவையெல்லாம் போதாது என்று
முதல்வர் மருந்தகம் தந்து அப்பாக்களின் அப்பாவானாய்,

எங்கள்
அப்பாவுக்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

**வேலூர்**
**த.சௌந்தர்.**




